**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **06.09.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## "பாரம்பரிய கொள்ளு வகைகளில் மதிப்புக் கூட்டுதல்"

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் சார்பில் பன்னாட்டு நிறுவனமான கிராண்ட் செலஞ்சு கனடா நாட்டின் நிதியுதவியுடன் "பாரம்பரிய கொள்ளு வகைகளில் மதிப்புக் கூட்டுதல்" என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி **04.09.2025** அன்று நடைபெற்றது. இந்த பயிற்சி வேளாண் வானிலையியல் உதவி பேராசிரியர் முனைவர் செ.கோகிலவாணி அவர்கள் வரவேற்று, பராம்பரிய கொள்ளு சாகுபடியில் காலநிலை மாற்றத்திற்கான முக்கியவத்தை விளக்கினார். பயிற்சியின் பிரதான நோக்கம், பராம்பரிய கொள்ளு இரகங்களின் சாகுபடி மற்றும் அவற்றை மதிப்புக் கூட்டுவதன் பயன்கள் பற்றியதாகும்.

இந்நிகழ்ச்சியை பயிர் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு), முனைவர் ந. செந்தில் அவர்கள் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அவர் மதிப்புக் கூட்டல் செய்யப்படும் பொருட்களின் தன்மை மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் பற்றி கூறினார். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மைய பேராசிரியரும் தலைவருமான முனைவர் நா.க.சத்தியமூர்த்தி அவர்கள், காலநிலை தகவல்களின் பயன்பாடு மற்றும் சாகுபடி முறைகள் குறித்து சிறப்புரையாற்றினார். அறுவடை பின்சார் தொழிற்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர்.சு.கார்த்திகேயன் அவர்கள், பாரம்பரிய கொள்ளு பயிரில் உள்ள அதிக புரதச்சத்து மற்றும் அதிலுள்ள மாவுச்சத்தின் வித்தியாசத்தை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பல்வேறு தொழிற்நுட்ப உரைகள் மற்றும் செய்முறை பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த **20** விவசாயிகள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் சார்பில் ஐந்து சுயஉதவிக்குழுப் பெண்கள் பங்கேற்றனர். மேலும், பாரம்பரிய நெல் இரகங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட சத்துமாவு பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. பயிற்சியின் நிறைவாக முனைவர் ப. கீதா அவர்கள் நன்றியுரையாற்றி மதிப்புக்கூட்டுதல் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் தன்னுடைய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**